# சமரச விழிப்புணர்வு

## சமரசம் நாடுவீர்

**வாங்க பேசி தீர்வு காண்போம்!**

**Come, Let Us Talk & Resolve.**



**சமரசம் மூலம் அமைதிகொள்**

**Mediation, for Solutions, Peace & More...**

### சமரசம் என்றால் என்ன?

வழக்கு தரப்பினர்கள் தங்களுடைய முரண்பாடுகளை நேரடியாக சமரசர் முன்னிலையில் பேசி சுமூகமான தீர்வு காண்பதே சமரசம் ஆகும்.

### சமரசம்... எப்படி?

- அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் சமரச மையங்கள் செயல்படுகின்றன.
- நிலுவையில் உள்ள உங்கள் வழக்குகளை நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ சமரச மையத்திற்கு அனுப்பக்கோரலாம்.
- அனைத்து மையங்களிலும் உள்ள பயிற்சி பெற்ற சமரசர்கள், சமரச பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக உங்களை வழிநடத்துவர்.
- சமரசர் முன்னிலையில் நீங்களே எதிர்தரப்புடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தலாம். இதில் உங்கள் வழக்கறிஞரும் பங்கு கொண்டு உங்களுக்கு உதவலாம்.
- இச்செயல்பாடுகள் உங்கள் வழக்கை எந்த வகையிலும் பாதிக்காது.
- சமரசம் ஏற்படவில்லையென்றால், நீங்கள் உங்கள் வழக்கை நீதிமன்றத்தில் தொடரலாம்.

### சமரசத்தின் பயன்கள்

- உங்கள் வழக்குகளுக்கு சமரச மையத்தில் சுமூகமான தீர்வு காணப்பட்டால், முழு நீதிமன்றக் கட்டணத்தையும் திரும்பபெறலாம்.
- உங்கள் பிரச்சனைகளை நீங்களே விரைவாக கையாண்டு, சுமூகமான தீர்வுகளை கட்டணம் ஏதுமின்றி காண முடியும்.
- சமரச மையத்தில் நடைபெறும் அனைத்து பேச்சுவார்த்தைகளும், எவ்வகையிலும் பதிவு செய்யப்பட மாட்டாது, இரகசியம் காக்கப்படும். சமரசத்தில் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் ஒருவருக்கு எதிராக சாட்சியங்களாக பயன்படுத்தப்படமாட்டாது.
- மிக எளிய முறையில், வேகமாகவும், பண விரயமில்லாமலும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தீர்வுகளை காண சமரசம் உதவுகிறது.
- இரு தரப்பினருக்கும் வெற்றி என்ற நிலை உருவாகும்.
- சமரச மையத்தில் காணப்படும் தீர்வே இறுதியானது. இதற்கு மேல்முறையீடு கிடையாது.

மேலும் விவரங்களுக்கு

**உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள சமரச மையத்தை அணுகவும்.**

**இணையதளம் : tnmcc.tn.gov.in**